பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 08 2024 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. லடாக்கின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில், ஐந்து புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்தியா – சிங்கப்பூர் இடையே அமைச்சர்கள் நிலையிலான பேச்சுக்கள் இன்று நடைபெற்றன.

3. ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான 16 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

4. குஜராத் மற்றும் மகாராஷ்ட்ராவில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

5. **Sinquefield** கோப்பைக்கான செஸ் போட்டியின் ஆறாவது சுற்றில் இந்தியாவின் பிரக்யானந்தா – சீனாவின் **Ding Liren** இடையேயான ஆட்டம் ட்ராவில் முடிவடைந்தது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

லடாக்கின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில், ஐந்து புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட உள்ளது வரவேற்கத்தக்கது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், **Zanskar, Drass, Sham, Mubra** மற்றும் **Changthang** ஆகிய புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இது அவற்றின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்க உதவிடும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

அரசின் சேவைகள் மக்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் சென்றடைய இந்த நடவடிக்கை உதவிடும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, புதிய மாவட்டங்கள் தொடர்பான அனைத்து அம்சங்களையும் ஆராய்வதற்காக குழு ஒன்றை ஏற்படுத்துமாறு லடாக் நிர்வாகத்திற்கு, மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

மாவட்டங்களின் எல்லையை வரையறை செய்வது உள்ளிட்ட பணிகளை இந்த குழு மேற்கொள்ளும் என்று உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த குழு தமது அறிக்கையை மூன்று மாதத்திற்குள் சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

இந்தியா – சிங்கப்பூர் இடையே அமைச்சர்கள் நிலையிலான பேச்சுக்கள் இன்று நடைபெற்றன.

சிங்கப்பூரில் நடைபெற்ற இந்த பேச்சுக்களில் இந்தியாவின் சார்பில் மத்திய அமைச்சர்கள் திருமதி நிர்மலா சீதாராமன், திரு ஜெய்சங்கர், திரு அஷ்வினி வைஷ்ணவ், திரு பியூஷ் கோயல் ஆகியோர் பங்கேற்றனர்.

சிங்கப்பூர் சார்பில் அந்நாட்டு துணை பிரதமர் திரு **Gan Kim Yong** தலைமையிலான குழுவினர் இதில் கலந்துகொண்டனர்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து இந்த பேச்சுக்களில் விவாதிக்கப்பட்டது.

முன்னதாக, மத்திய அமைச்சர்கள், சிங்கப்பூர் அதிபர் திரு சண்முக ரத்னம் மற்றும் பிரதமர் திரு **Lawrence Wong** ஆகியோரை சந்தித்து பேசினர்.

இந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இருநாடுகளுக்கு இடையேயான உறவை அடுத்தக்கட்டத்திற்கு எடுத்து செல்வது குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

பொதுமக்களின் குறைகளை களைவதற்கான ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்வதற்கான அம்சங்கள் இந்த நெறிமுறையில் இடம்பெற்றுள்ளன.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான 16 பேர் கொண்ட இரண்டு வேட்பாளர் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

இதன்படி, **Ramban** தொகுதியில் **Rakesh Thakur** -ம், **Banihal**-ல் **Salim Bhat**-ம் போட்டியிடுகின்றனர்.

90 உறுப்பினர்களை கொண்ட ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கான தேர்தல் அடுத்த மாதம் 18-ஆம் தேதி தொடங்கி மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அக்டோபர் மாதம் 4-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

<<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் பயிற்சி பெண் மருத்துவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அம்மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில், பயிற்சி மருத்துவர்களின் போராட்டம் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, இந்த போராட்டம் நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, இச்சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டுவரும் சிபிஐ சம்பந்தப்பட்ட மருத்துவமனையின் நிதி முறைகேடுகள் குறித்தும் விசாரணை நடத்தியுள்ளது.

இதுதொடர்பாக, 15 இடங்களில் சிபிஐ சோதனை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் உள்ள பள்ளிகளில் அவசரகால உதவிக்கான சேவையை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அம்மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு **Deepak Kesarker** கூறியுள்ளார்.

இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே-யிடம் விரிவாக ஆலோசனை நடத்தியதாக தெரிவித்தார்.

பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பள்ளிகளில் புகார் பெட்டிகள் வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு **Deepak Kesarker** தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

ஒடிஷாவில் பறவைக்காய்ச்சல் பாதிப்பு உறுதிசெய்யப்பட்டதையடுத்து, கோழிகளை அழிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

20 ஆயிரம் கோழிகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என்று ஒடிஷா அரசு அறிவுறுத்தியுள்ளது.

**<<<<<<>>>>>**

குஜராத் மாநிலத்தில் பெய்த கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை முதல் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, மழை வெள்ள பாதிப்பு குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு பூபேந்திர படேல், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமையை கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனுக்குடன் நிவாரணப்பணிகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

கனமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குஜராத்தில் உள்ள ஆரம்ப பள்ளிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ராஜஸ்தான் மற்றும் மகாராஷ்ட்ரா மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் இன்று அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.

மத்தியப்பிரதேசம், கர்நாடகா மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

சத்தீஸ்கரில் 25 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் மத்திய ரிசர்வ் காவல்படையின் உயரதிகாரிகள் முன் இவர்கள் சரணடைந்ததாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

பல்வேறு குற்றச்சம்பவங்களில் தொடர்புடைய இவர்களை பிடிப்பதற்கு 25 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இவர்கள் சரணடைந்துள்ளனர்.

<<<<<<>>>>>

விவசாயிகள் போராட்டம் தொடர்பாக, பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் கங்கனா ரனாவத் தெரிவித்த கருத்துக்கள் கட்சியின் நிலைப்பாடு அல்ல என்று பிஜேபி தெளிவுபடுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, பிஜேபி வெளியிட்டுள்ள அறிக்கையில், முக்கிய பிரச்சினைகள் குறித்து கருத்து தெரிவிக்க அவருக்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளது.

இதுபோன்ற கருத்துக்கள் தெரிவிப்பதை வருங்காலங்களில் கங்கனா ரனாவத் தவிர்க்க வேண்டும் என்றும் பிஜேபி அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் போலியோ விழிப்புணர்வு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக உலக சாதனைக்கான சிலம்பப்போட்டி நாமக்கல்லில் நடைபெற்றது.

மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் டைட் - கண்ணன் - 33 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>**

யுக்ரைனுக்கு எதிராக ரஷ்யா தொடர் தாக்குதல்களை தொடங்கியுள்ளது.

ட்ரோன் மற்றும் ஏவுகணைகளை பயன்படுத்தி ரஷ்யா இந்த தாக்குதலை நடத்தி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த தாக்குதலில் பலர் உயிரிழந்ததாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**<<<<<<>>>>>**

ஜப்பானில் **Shanshan** சூறாவளி நாளை அல்லது நாளை மறுநாள் கரையை கடக்கக்கூடும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஜப்பானின் மேற்கு பகுதியில் இது கரையை கடக்க உள்ளதால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சூறாவளி கரையை கடக்கும்போது **Kyushu** மற்றும் **Amami** பகுதிகளில் மணிக்கு 162 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகனமழை பெய்யக்கூடும் என்பதால் நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்றும் ஜப்பான் அரசு எச்சரித்துள்ளது.

**<<<<<<>>>>>**

ஆஸ்திரேலியாவில் பணிநேரத்திற்கு பிறகு ஊழியர்களுக்கு வேலை வழங்குவதை தடுக்க வகை செய்யும் சட்டம் இன்று முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

இதன்படி, வரையறுக்கப்பட்ட பணிநேரத்திற்கு பிறகு எந்தவொரு உத்தரவையும் ஊழியர்கள் பின்பற்ற தேவையில்லை என்பதற்கான உரிமை இந்த புதிய சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அவசரகால பணிகளுக்கு இது பொருந்தாது என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

அமெரிக்காவின் செயின்ட் லூயிசில் நடைபெற்றுவரும் **Sinquefield** கோப்பைக்கான செஸ் போட்டியின் ஆறாவது சுற்றில் இந்தியாவின் பிரக்யானந்தா – சீனாவின் **Ding Liren** இடையேயான ஆட்டம் ட்ராவில் முடிவடைந்தது.

இதேபோல், குகேஷ் - பிரான்சின் **Maxime Vachier Lagrave** இடையேயான ஆட்டமும் ட்ராவில் முடிவடைந்தது.

இப்போட்டியில் மூன்று புள்ளிகளுடன் பிரக்யானந்தா ஐந்தாவது இடத்திலும், குகேஷ் ஆறாவது இடத்திலும் உள்ளனர்.

**<<<<<<>>>>>**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியின் 12 பிரிவுகளில் இந்தியா பங்கேற்கிறது.

இதில் சைக்கிளிங், படகு துடுப்பு மற்றும் ஜூடோ பிரிவுகளில் இந்தியா முதல் முறையாக கலந்துகொள்கிறது.

இப்போட்டிகள் நாளை மறுநாள் தொடங்கி, அடுத்த மாதம் 8-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**<<<<<<>>>>>**

டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் **Dhakshneswar Suresh** 102 இடங்கள் முன்னேறி தொள்ளாயிரத்து 85-ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

**<<<<<<>>>>>**

20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் பங்களாதேஷ் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

நேபாளத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் பங்களாதேஷ் பெனால்டி சூட் அவுட் முறையில் இந்தியாவை வென்றது.

**<<<<<<END>>>>>**